

# 11 ஐரோப்பாவில் புதிய அரசியல் சிந்தனையில் ஏற்பட்ட வளர்ச்சி

***இந்த அலகில் நவீன யுகத்தில் ஐரோப்பாவில் ஏற்பட்ட மானிடவாதம், தேசிய வாதம், லிபரல்வாதம், சமூகவாதம் போன்ற பல்வேறு எண்ணக்கருக்கள் தொடர்பாகவும், அவற்றின் நடைமுறை நிகழ்வுகளான பிரான்சியப்புரட்சி, இத்தாலிய ஐக்கியம், ஜேர்மனிய ஐக்கியம், ரஷ்யப்புரட்சி போன்றவை தொடர்பான விபரங்களையும் கற்கலாம்.***

## மானிடவாதம் என்றால் என்ன?

ஐரோப்பாவில் இடையிடையே பல்வேறு எண்ணக்கருக்கள் தோற்றம் பெற்றன. உதாரணமாக அதிக பயனுடையவைகள் உயர்வானவையாகக் கருதப்பட்டது. அது பயன்பாட்டுவாதம் எனப்பட்டது. அனைத்திற்கும் மேலாகப் பணம் முக்கியமெனக் கருதப்பட்டது. அது வணிகவாதமாகும். இவை அனைத்தையும் கீழ்ப்படுத்தி அனைத்துக்கும் மேலாக மனிதன் மேலானவன் என்ற எண்ணக்கரு தோன்றியது. அது மானிடவாதமாகும். மானியமுறைக் காலத்தின் இறுதியில் மனிதன் மனிதனை மேலாகக் கருதியதால் மானிடவாதம் தோற்றம் பெற்றது. அது நிகழ்காலம் வரை ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும். பிரான்சியப் புரட்சி மானிடவாதத்தை வெளிப்படுத்திய முக்கிய சந்தர்ப்பமாக அமைந்ததுடன் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தற்கால மக்களுக்கு அது துணையாகவும் அமைந்தது.

புத்த பெருமானின் படிப்பினைக்கு அமையவும் இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் போன்ற உலகின் முக்கிய மதங்களின் படிப்பினைகளுக்கு அமையவும் மனிதனுக்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டுள்ளதுடன் இப்பழைய எண்ணக்கருவின் மறுபிறப்பாக ஐரோப்பாவில் ஏற்பட்ட மானிடவாதத்தைக் குறிப்பிடலாம்.

## பிரான்சியப்புரட்சி -1789

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு மனிதன் மேலானவன் என்பதைக் கவனத்திற்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் பிரான்சியப் புரட்சி ஆரம்பமானது.

கி.பி. 1789 ஆம் ஆண்டில் பிரான்சை ஆட்சி செய்த 16 ஆம் லூயி மன்னனுக்கு எதிராக ஏற்பட்ட அரசியல் கிளர்ச்சி பிரான்சியப் புரட்சி எனப்படும். இது 16 ஆம் லூயி மன்னனுக்கு முன்னர் ஆட்சி செய்த 14 ஆம், 15ஆம் லூயி மன்னர்களின்

காலத்திலேயே பிரான்சியப் புரட்சி ஏற்படுவதற்கான காரணங்கள் படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்தன.

### அரசியல் காரணங்கள்

பிரான்சில் ஏனைய ஐரோப்பிய நாடுகளைப் போன்று அரசியல் சீர்திருத்தங்கள் நடைபெறவில்லை. உதாரணமாக இங்கிலாந்தில் பாராளுமன்ற முறை தோன்றியபொழுதிலும் , பிரான்சில் தொடர்ந்து முடியாட்சி முறையே நிலவி வந்தது.

14 ஆம் லூயி மன்னன் திறமையான ஆட்சியாளனாக இருந்ததால் எல்லையற்ற சர்வாதிகார முறையை ஏற்படுத்தினான். 'நானே அரசு' என அவன் கூறினான். உதாரணமாக அரசனின் அரச சபை எனும் ஆலோசனைச் சபைக்கு அமைச்சர்கள் நீதிபதிகள், தூதுவர்கள் போன்ற அதிகாரிகளை நியமிப்பதும், அகற்றுவதும் அரசனின் கையிலேயே இருந்தது.



*உரு 11:1 14 ஆம் லூயி மன்னன்.*

15 ஆம் லூயி மன்னனும், 16 ஆம் லூயி மன்னனும் இதனையே முன்னெடுத்துச் செல்ல முயன்றனர். எனினும் கீழ்மட்ட அதிகாரிகள் அரசனுக்குச் சார்பாக இருக்கவில்லை.

பிரான்சின் முடியாட்சி சர்வாதிகாரமாக உருவெடுத்ததுடன் பழங்காலம் முதல் இருந்து வந்த மக்கள் பிரதிநிதிகள் நிறுவனமான ஸ்டேட் ஜெனரல் கூட்டப்படவில்லை. இவைகளும் பிரான்சியப் புரட்சிக்குக் காரணங்களாயின. ஸ்டேட் ஜெனரல் என்ற பிரான்சிய பாராளுமன்றம் குருமார், பிரபுக்கள், சாதாரண மக்கள் என்போரைக் கொண்டதாக இருந்தது. இந்தச் சபை கி.பி 1614 ஆம் ஆண்டின் பின்னர் கூட்டப்படாமையானது அரசன் இதனைப் புறக்கணித்தமையைக் காட்டுகிறது. முடியாட்சி, அதிகாரத்தைக் குவித்துக் கொண்டதால் பிரதேச நிர்வாக நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைந்தன. இதனால் எழுந்த சீர்கெட்ட நிர்வாகம், பிரான்சியப் புரட்சிக்குக் காரணமாகியது.

பிரான்சின் நீதித்துறையும் மோசமான நிலையில் இருந்தது. பிரதேசங்களுக்குப் பிரதேசம் வேறுபட்ட 360 சட்ட முறைகள் காணப்பட்டன. மேலும் எவரையும் எந்த நேரத்திலும் கைது செய்ய ஆணை பிறப்பிக்கக் கூடியதாக இருந்ததுடன் சிறையில் அடைக்கக் கூடியதாகவும் இருந்தது. அவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் பஸ்டீல் சிறைக்கூடத்தில் சிறை வைக்கப்பட்டனர். சர்வாதிகாரத்தின் அடையாளமாக விளங்கிய பஸ்டீல் சிறைச்சாலை ஆத்திரமுற்ற மக்களால் தாக்கப்பட்டதுடன் அங்கிருந்த சிறைக்கைதிகள் விடுவிக்கப்பட்டனர். இது பிரான்சியப் புரட்சியின் ஆரம்பமாகக் கருதப்படுகிறது.



*உரு 11:2 பஸ்டீல் சிறைக்கூடம்.*



இலவச விநியோகத்திற்காக

16 ஆம் லூயி மன்னனின் காலத்தில் நிலவிய பொருளாதார சீர்கேடும் புரட்சிக்குக் காரணமாகியது. 14 ஆம் லூயி மன்னனின் காலம் முதற்கொண்டு வெளிநாட்டு யுத்தங்களில் பிரான்ஸ் ஏராளமான பணத்தைச் செலவிட்டிருந்தது. இதனால் 16 ஆம் லூயி மன்னனின் காலத்தில் பிரான்ஸ் வரிச்சுமையால் இன்னலுற்றது.

14 ஆம் லூயி மன்னன் சிறந்த செயற்றிறமை உள்ளவனாக இருந்ததுடன் அனைத்து விடயங்களையும் பற்றிக் கவனிக்கும் ஆட்சியாளனாக இருந்தான். எனினும் 16 ஆம் லூயி மன்னன் தனது ஆட்சிக்காலத்தில் எதனைப்பற்றியும் கவனிப்பதில் அக்கறை காட்டவில்லை. இதுவும் பிரான்சியப் புரட்சிக்குக் காரணமாகியது. ஆட்சியாளருக்கும் சாதாரண மக்களுக்கும் இடையிலான தொடர்பு விரிசலடைந்திருந்தது.

16 ஆம் லூயி மன்னனின் ஆலோசகராக இருந்தவர் பழமையான சிந்தனையுடைய 74 வயதான மொரிபா என்பவராவார். வயோதிபரான இவர் தமது பதவியினால் சலுகைகளை அனுபவித்தாரே தவிர முக்கிய சீர்திருத்தத்தின் பொருட்டு எதனையும் செய்யவில்லை. டர்கோ, நெக்கர் போன்ற சிறந்த அமைச்சர்கள் நிர்வாகத்தில் சீர்திருத்தங்களை முன்வைத்த போது அரசனால் அவர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.

16 ஆம் லூயி மன்னனின் மனைவி ஆஸ்திரியாவைச் சேர்ந்த மேரி அன்டோயினட் ஆவாள். அவள் வெளிநாட்டுப் பெண்ணாக இருந்ததால் பிரான்ஸ் பற்றிய எவ்வித தெளிவும் கொண்டவளாக இருக்கவில்லை. மேலும் அவள் தேவையற்ற விதத்தில் பிரான்சிய நிர்வாகத்தில் தலையிட்டதால் மக்கள் அவள் மீது வெறுப்புக் கொண்டிருந்தனர்.

## பொருளாதார நிலைமை

1. பிரான்சில் சலுகை பெற்றிருந்த பிரபுக்களும் உயர் பதவிகளில் இருந்த சிறுதொகையினரான குருமாரும் வரி செலுத்துவதிலிருந்து விலக்குப் பெற்றிருந்தனர். பிரபுக்களினதும் திருச்சபையினதும் நிலங்களில் இருந்த விவசாயிகளுக்கு நிலமானிய வரி உட்பட அரசாங்கத்திற்குப் பெருந்தொகையாக வரி செலுத்த வேண்டியிருந்தது. ‘வேலி’ என்ற முக்கிய வரி நகரங்களில் அறவிடப்படவில்லை. கிராமிய மக்களிடமிருந்து அறவிடப்பட்டது. உப்புவரி (கெபேஸ்) அறவிடப்பட்டமையாலும் மக்கள் இன்னல்களுக்கு ஆளானார்கள். இதற்கிடையில் கெப்பிடேஷன் எனும் புதிய வரியை அனைவரும் செலுத்த வேண்டுமென அரசாங்கம் விதித்தது. பொருட்களைக் கொண்டு செல்லும் போது ஒரே பொருளுக்குப் பல இடங்களில் வரி செலுத்த வேண்டி இருந்தது. நீருக்கும் வரி செலுத்த வேண்டி இருந்தது. புரட்சி ஆரம்பமாகும் போது சாதாரண பொதுமக்கள் தமது வருமானத்தின் 50% - 60% வீதத்தை வரியாக செலுத்துவதில் செலவிட்டனர்.

2. ஐரோப்பாவில் மறுமலர்ச்சியுடன் வர்த்தகத்தின் மூலம் செல்வந்தர்களாகிய மத்திய வகுப்பினர் தோன்றினர். பிரான்சிலிருந்த இந்த மத்திய வகுப்பினரால் அரசியல் செயற்பாடுகளில் பங்குபற்ற முடியவில்லை. இதுவும் புரட்சிக்கு ஒரு காரணமாக அமைந்தது.

3. கி.பி 1786 ஆம் ஆண்டு இங்கிலாந்துடன் செய்து கொள்ளப்பட்ட ஈடன் உடன்படிக்கையின் காரணமாகப் புடைவை இறக்குமதி மீதான இறைவரி நீக்கப்பட்டது. இங்கிலாந்தில் உற்பத்தியின் பொருட்டு இயந்திரம் உபயோகப்படுத்தப்பட்டதால் உற்பத்திச் செலவு குறைந்தது. எனவே பிரான்சின் சிறு கைத்தொழில் உற்பத்திகள் அவற்றுடன் போட்டியிட முடியவில்லை. இதனால் பிரான்சின் உற்பத்தி ஸ்தம்பிதம் அடைந்தது.



*உரு 11.3 வரிச்சுமை*

4. வெளிநாட்டு யுத்தங்கள் காரணமாக அரச திறைச்சேரி வெறுமையடைந்தமை புரட்சிக்கு மற்றுமொரு காரணமாகும்.

5. செல்வந்தர், ஏழை என்ற காரணத்தாலும் பிரபுக்களிடையேயும் மோதல்கள் ஏற்பட்டன.

6. பிரான்சிய மக்களில் 90 வீத்தினர் விவசாயிகளாய் இருந்ததுடன் அவர்கள் பிரபுக்களின் நிலங்களில் பயிர் செய்தனர். பிரபுக்களின் திராட்சை ஆலைகள், கோதுமை ஆலைகள் என்பனவற்றையே அவர்கள் பயன்படுத்த வேண்டுமெனக் கட்டாயப்படுத்தப்பட்டதோடு இதன் பொருட்டு வரி செலுத்தவும் வேண்டி இருந்தது. மேலும் பிரபுக்கள் வேட்டையாடும் போது விவசாயிகளின் வயல் நிலங்களுக்கூடாகத் தமது குதிரைகளைக் கொண்டு சென்றனர். இதற்கு எதிராக மக்களால் செயற்பட சந்தர்ப்பம் இருக்கவில்லை.

7. பிரபுக்கள் வேலியடைப்புச் செய்ததால் விவசாயிகளுக்கு அவர்களின் கால் நடைகளுக்கான புற்றரை இல்லாமல் போனமையும் புரட்சிக்கு ஒரு காரணமாக அமைந்தது.

### ஏனைய காரணங்கள்

1) 18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ரூசோ, வோல்டேயர், மொன்டஸ்கியூ போன்ற தத்துவஞானிகள் முன்வைத்த மானிடவாதக் கொள்கையும் பிரான்சியப் புரட்சிக்கு வழிவகுத்தது.
2) இங்கிலாந்தில் இருந்த பாராளுமன்ற ஜனநாயக முறையும் பிரான்சின் முடியாட்சி வீழ்ச்சியுறக் காரணமாக அமைந்தது.
3) கி.பி 1776 ஆம் ஆண்டில் நிகழ்ந்த ஐக்கிய அமெரிக்க சுதந்திரப் போரும் இதில் தாக்கம் செலுத்தியது.


இலவச விநியோகத்திற்காக

## புரட்சியின் ஆரம்பம்

சலுகைகளை இழந்தவர்கள் டெனிஸ் மைதானத்தில் ஒன்றுகூடிப் புதிய அரசியலமைப்பினை அறிமுகம் செய்வதாக உறுதியளித்தனர். இது 'டெனிஸ் மைதான சத்தியப்பிரமாணம்' என வரலாற்றில் இடம்பெறுகிறது. கி.பி 1788 ஸ்டேட் ஜெனரல் மீண்டும் கூட்டப்பட்டதுடன், அதிலும் அரசியலமைப்புச் சீர்திருத்தம் அறிமுகம் செய்வதற்கு முடிவு செய்யப்பட்டது. கி.பி 1789 ஆம் ஆண்டு பிரான்சில் ஏற்பட்ட பஞ்சம் காரணமாகப் பொதுமக்கள் வீதியில் இறங்கி அரசனுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்ததுடன் பஸ்டீல் சிறைச்சாலையைத் தாக்கினர். இது பிரான்சியப் புரட்சியின் அடையாளமாகும். கி.பி 1789 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29ம் திகதி மனித உரிமை தொடர்பான சாசனம் வெளியிடப்பட்டது. ''அனைத்து மனிதர்களும் சமமானவர்கள். அவர்கள் சட்டங்கள் இயற்றுவதில் பங்கேற்க வேண்டும். கருத்து வெளியிட அவர்களுக்கு உரிமையுண்டு' என அதில் வெளியிடப்பட்டது. பிரபுக்களின் அதிகாரம் நீக்கப்பட்டது. உயர் வகுப்பைச் சேர்ந்த குருமாரிடம் இருந்த அதிகாரங்கள் நீக்கப்பட்டுத் திருச்சபை மீதும் பல சட்டங்கள் விதிக்கப்பட்டன. கி.பி 1791 ஆம் ஆண்டு புதிய யாப்பை உருவாக்கியதுடன் அதன் மூலம் சட்டமியற்ற 750 பேரைக் கொண்ட சபையை அமைத்து அரசனின் அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டது. பொதுமக்களை அரசன் விரும்பியவாறு சிறைப்படுத்த முடியாது. போனது கி.பி. 1793 ஆம் ஆண்டு விசாரணை நடாத்தி 16 ஆம் லூயி மன்னனும் அவனது மனைவியான மேரி அன்டடோயினட்டும் மரண தண்டனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

பிரான்சியப் புரட்சி பல ஆண்டுகளாக நிகழ்ந்த சீர்திருத்தங்களின் தொடர் விளைவாகும். ஆசிரியர்கள், நீதிபதிகள், பேராசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், குருமார், விவசாயிகள் ஆகியோர் அதன் பங்காளிகளாவர். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற எண்ணக்கரு பிரான்சிலும் அதற்கு வெளியிலும் இதனால் பரவியது. அது மனிதனின் உரிமையைப் பாதுகாத்த புரட்சியாகும்.

**செயற்பாடு :**

★ *பிரான்சியப் புரட்சியின் மூலம் மானிடவாதம் வெளிப்பட்ட விதத்தை விபரிக்குக*

**தேசிய வாதம்**

குறிப்பிட்ட நிலப்பரப்பில் குறிப்பிட்ட ஒரே இயல்புகளைக் கொண்ட மக்கள் பொது நோக்கை அடிப்படையாகக் கொண்டு ஒரே குழுவாகத் தனது நிலையைக் கட்டி யெழுப்புவதாகும். மொழி, இனம், மதம், பழக்கவழக்கங்கள், உரிமை என்பனவே பெரும்பாலும் தேசியவாதத்திற்கு அடிப்படையாக அமைகிறது.

**லிபரல் (தாரண்மை)வாதம்**

மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட சபையின் துணையுடன் உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்பின் மூலம் மக்களுக்கு சிறந்த ஆட்சியை அமைத்துக் கொடுப்பதே லிபரல் வாதத்தின் எண்ணக்கருவாகும்.

## இத்தாலிய ஐக்கியத்தின் முக்கிய கட்டங்கள்

### இத்தாலியில் வெளிநாட்டு ஆதிபத்தியம்

மத்திய காலத்தில் இத்தாலி பல சிற்றரசுகளாகச் சிதறிக் கிடந்தது. அந்த அரசுகளிடையே அதிகாரப் போட்டி நிலவியது. அவ்வாறே ஐரோப்பாவில் இருந்த பலம் வாய்ந்த அரசுகள் இத்தாலியின் பிரதேசங்களைத் தமது ஆட்சியின் கீழ் வைத்திருந்தன. உதாரணமாக சிசிலி, நேப்பிள்ஸ் என்பன ஸ்பானியாவின் கீழ் இருந்தன. பர்மா, மொடினா, டஸ்கனி, வெனிஸ் முதலான நகரங்கள் ஆஸ்திரியாவின் கீழும் மத்திய இத்தாலி பாப்பரசரின் கீழும், வேறு சில பகுதிகள் பிரபுக்களின் கீழும் இருந்தன.




*தேசப்படம் 11.1 இத்தாலிய ஐக்கியம்*

வெளிநாட்டவரின் ஆதிக்கமும், பாப்பரசரின் அரசும் (திருச்சபை அரசு) இத்தாலியை இணைப்பதற்குத் தடையாக இருந்தன. ஆஸ்திரியப் பேரரசு பலம் வாய்ந்ததாக இருந்ததால் அதனைத் தோற்கடிப்பது மிகவும் கடினமான செயல் என்பது தெளிவாகத் தெரிந்தது. பாப்பரசரின் அரசியல் அதிகாரமான திருச்சபை அரசை நீக்குவதற்கு செயற்பட்டால் ஐரோப்பாவிலிருந்த ஏனைய கிறிஸ்தவ அரசுகள் இத்தாலிக்கு எதிராக செயற்படுவதற்கு இடமிருந்தது.

பிளவுபட்டிருந்த இத்தாலிய மக்களிடையே தேசிய உணர்வை ஏற்படுத்தி அதனை ஒன்றிணைக்க முடியும் என்று வழிகாட்டியவன் நெப்போலியன் பொனபாட் ஆவான். ஜோசப் மசினி அதனை செயலில் முன்னெடுத்துச் சென்றதுடன், அதனைத் திட்டமிட்டவர் கவுன்ட் கவூர் ஆவார். கரிபால்டி இதன் பொருட்டுப் படையைத் திரட்டினார்.



இலவச விநியோகத்திற்காக

## நெப்போலியனின் கீழ் இத்தாலி



உரு 11.4 நெப்போலியன் பொனபாட்

நெப்போலியன் கி.பி. 1797 ஆம் ஆண்டு வட இத்தாலியில் லொம்பாடி, ஜெனோவா, நேப்பிள்ஸ் ஆகிய பிரதேசங்களை அங்கிருந்த ஆட்சியாளர்களைத் துரத்தியே கைப்பற்றிக் கொண்டார். கி.பி 1807 ஆம் ஆண்டு பாப்பரசரின் கீழ் இருந்த இத்தாலியப் பிரதேசத்தைப் பெற்று ‘‘வட இத்தாலி’’ என்ற அரசை ஆரம்பித்து அதன் அரசனாக முடி சூடிக்கொண்டான். அவனது தலைநகராக மிலான் விளங்கியது. பின்னர் சிசிலிப் பிரதேசத்தையும் இணைத்துக் கொண்டான்.

நெப்போலியன் பொனபாட் இத்தாலிக்கு நெப்போலிய சட்டத்தை அறிமுகம் செய்ததுடன் பிரபுக்களின் அதிகாரத்தை இல்லாதொழித்தான். திறமையானவர்களுக்குப் பதவிகள் வழங்கியதுடன் வீதிகளும் பாலங்களும் அமைத்தான்.

## வியன்னா மகாநாட்டின் பின்னர் இத்தாலி

நெப்போலியன் யுத்தத்தில் தோல்வியடைந்ததுடன் கி.பி 1815 இல் வியன்னா மகாநாட்டின் மூலம் இத்தாலியப் பிரதேசம் மீண்டும் கி.பி 1798 ற்கு முன் ஆட்சி செய்தவர்களுக்கு வழங்கப்பட்டது. அதன்படி உரோமை மையமாகக் கொண்ட மத்திய இத்தாலி பாப்பரசருக்கும் ஏனைய பிரதேசங்கள் அந்தந்த அரச வம்சத்தினருக்கும் கிடைத்தன.

இதன் பின்னர் அதாவது கி.பி. 1815 ஆம் ஆண்டின் பின் ஆஸ்திரியா, ஸ்பானியா ஆகிய நாடுகள் இத்தாலியின் மூலம் பயன் அடைந்தன. இத்தாலிய ஆட்சியாளர் என்று கூறக்கூடியதாக இருந்தது பாப்பரசரும் சார்டீனியா மன்னரும் மாத்திரமேயாவர். நெப்போலியனின் விதவை மனைவியாகிய மேரி லூயியின் கீழிருந்த தஸ்கனிப் பிரதேசத்தில் சிறந்த ஆட்சி நிலவியது. ஆஸ்திரியா தனது பேரரசிற்குத் தேவையான வருமானத்தில் 25% இத்தாலியப் பகுதியிலிருந்தே பெற்றது. ஆட்சியை நடாத்துவதற்குக் கடுமையான சட்டதிட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டன. சார்டீனியாவின் மன்னன் விக்டர் இம்மானுவேலும் மக்களை இன்னல்களுக்கு உள்ளாக்கிய ஆட்சியாளன் ஆவான்.

## காபொனாரி இயக்கம்

இந்தக் கொடூர அநீதி ஆட்சிகளால் மீண்டும் இத்தாலிய மக்களிடம் தேசிய உணர்வு எழுச்சி பெற்றது. இரகசியமாக இணைவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன் பொருட்டு ‘காபொனாரி’ என்ற இரகசிய இயக்கம் தோற்றம் பெற்றது. அதன் தலைவர் ஜோசப் மசினியாவார். ‘‘கருஞ்சட்டை வீரர்’’ என்ற பெயரால் அவர்கள் அறிமுகமாகினர். கி.பி 1825 ஆம் ஆண்டளவில் காபொனாரி

இயக்கத்தை அடக்கி, மசினியைப் பிரான்சிற்கு நாடு கடத்துவதில் ஆஸ்திரிய அரசு வெற்றி கண்டது.

## இளம் இத்தாலி இயக்கம்

கி.பி 1830 ஆம் ஆண்டு மீண்டும் இத்தாலியை இணைப்பதற்குக் குரல் எழுப்பப்பட்ட போதிலும் அது தோற்கடிக்கப்பட்டது. கி.பி 1831 ஆம் ஆண்டு பீட்மன்ட்டில் ஆட்சியதிகாரம் பெற்ற மன்னன் அல்பர்ட் சார்ள்ஸ் அதற்குத் துணையாக இருப்பான் என நம்பிய போதிலும் அது அவ்வாறு நடைபெறாததால் ''இளம் இத்தாலி இயக்கம்'' உருவானது. ''ஒற்றுமையும் சுதந்திரமும்'' அவர்களது தாரக மந்திரமாகும்.

## கவுன்ட் கவூரின் பங்களிப்பு

திறமையான சேனாதிபதியான அவன் இங்கிலாந்தின் பாராளுமன்றத்தை மதித்தான். அவன் கி.பி 1852 ஆம் ஆண்டு இத்தாலியில் பீட்மன்ட் அரசின் பிரதம மந்திரியானான். ''மறு பிறப்பு'' எனும் நூலை எழுதி இத்தாலிய மக்களுக்கு உற்சாக மூட்டிய அவன், பீட்மன்ட் அரசில் புதிய அரசியலமைப்பை ஏற்படுத்தி, பொது வசதிகள், உற்பத்தி என்பனவற்றை அதிகரித்து பீட்மன்ட் அரசை வலுப்படுத்தி இத்தாலிய இணைவிற்கு தலைமைத்துவம் வழங்கும் பொருட்டாகும். அவ்வாறே மூன்றாம் நெப்போலியன் என்ற பிரான்சியப் பேரரசனுடன் புளொம்பியஸ் உடன்படிக்கை செய்து ஆஸ்திரியாவுக்கு எதிராகப் போரை மேற்கொள்ள கவுன்ட் கவூரால் முடியுமாக இருந்த போதிலும், மூன்றாம் நெப்போலியன் திடீரென படை உதவியை நிறுத்திக்கொண்டதால் அந்த முயற்சி தோல்வியடைந்தது. மூன்றாம் நெப்போலியன் அந்தப் போரைக் கைவிட்டது ஆஸ்திரியாவுடன் விலாபிராங்கா என்ற உடன்படிக்கையைச் செய்து கொண்டதினாலாகும்.

## கரிபால்டியின் செயற்பாடு

சவோயில் பிறந்த கரிபால்டி வெளிநாட்டு கெரில்லாப் போரினை மேற்கொண்ட தலைவனாவான். அவன் கி.பி 1860 ஆம் ஆண்டின் பின்னர் தனது செஞ்சட்டை வீரர் 1000 பேருடன் சிசிலிக்குச் சென்று மெசினா நகரைத் தவிர ஏனைய பிரதேசங்களைக் கைப்பற்றினான். அதன் பின்னர் நேப்பிள்சை தன் கீழ் கொண்டு வந்தான். கரிபால்டியின் செல்வாக்குக் காரணமாக மெசினா நகரும் அவனுடன் இணைந்தது. இப்பிரதேசத்தின் தலைமைப் பதவியைக் கரிபால்டி வகித்த போதிலும் அப்பிரதேங்கள் அனைத்தையும் இரண்டாம் விக்டர் இம்மானுவேலுக்கு வழங்கியமையானது அவனது உயர்ந்த தியாகத்தை வெளிப்படுத்துகிறது. வெனீஸ் ஆஸ்திரியாவின் கீழும், உரோம் பாப்பரசரின் கீழும் இருந்தமை இத்தாலிய ஐக்கியத்துக்குத் தடையாக இருந்தது. ஆதலால் ஜேர்மனியின் பிஸ்மார்க்குடன் உடன்படிக்கை செய்துகொண்டதால் கரிபால்டி ஜேர்மன் - ஆஸ்திரியப் போரில் ஜேர்மனுக்கு உதவி, வெனீசைத்தான் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கையை எடுத்தான். கி.பி 1870 ஆம் ஆண்டு

பிரான்சிற்கும் ஜேர்மனிக்கும் இடையில் போர் மூண்டதால் உரோமில் பாப்பரசருக்கு ஆதரவாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படையைத் திருப்பி அழைக்க வேண்டிய நிலை பிரான்சிற்கு ஏற்பட்டது. அதன் விளைவாகப் பாப்பரசரின் அரசினைப் போரின்றி இத்தாலியுடன் இணைத்துக்கொள்ள முடியும் என்பது தெளிவானதால் பாப்பரசர் தம் விருப்பப்படி உரோமை விட்டு வத்திக்கானில் தன் மாளிகையில் தங்கினார்.

ஐரோப்பிய வரலாற்றைப் பல வழிகளிலும் மாற்றியமைக்க நீண்ட காலமாகப் பங்களிப்புச் செய்த பாப்பரசரின் அரசு இதன் மூலம் முடிவுற்ற போதிலும் பாப்பரசரின் அரசியல் அதிகாரத்தை அடையாளப்படுத்தும் முகமாகப் பாப்பரசர் பதினோராம் பத்திநாதரால் (பியுஸ்) கி.பி 1929 ஆம் ஆண்டு இத்தாலியின் முசோலினியுடன் உடன்படிக்கை செய்யப்பட்டது. இதன்படி ஒன்றரை சதுர மைலைக் கொண்ட தற்கால வத்திக்கான் அரசு அமைக்கப்பட்டது. அது இன்று உலகிலேயே சகல ஆதிக்கமுமுடைய சிறிய அரசாக விளங்குகிறது.

**செயற்பாடு :**

1. *இத்தாலிய ஐக்கியத்தில் முக்கிய கட்டங்களை உமது வகுப்பில் கலந்துரையாடுக*
2. *மசினி, கவூர், கரிபால்டி ஆகியோர் இத்தாலிய ஐக்கியத்திற்கு ஆற்றிய சேவையைப் பற்றிக் கட்டுரை எழுதுக.*
3. *இத்தாலிய ஐக்கியம் தொடர்பான செயற்பாட்டின் அடிப்படை தேசிய வாதக் கொள்கையாகும். கட்டுரை எழுதுக.*

## ஜேர்மனிய ஐக்கியம்

இங்கு நாம் ஜேர்மனிய ஐக்கியத்தின் முக்கிய கட்டங்களை ஆராய்ந்து பார்ப்போம். கி.பி 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஜேர்மன் என்ற பெயரில் ஒரு நாடு இருக்கவில்லை. அப் பிரதேசத்தில் ஜேர்மன் மொழி பேசும் மக்களைக் கொண்ட 369 நாடுகள் இருந்தன. அவைகளில் பிரஷ்யா, ஆஸ்திரியா என்பவை முக்கியமானவைகளாகும்.

நெப்போலியன் கி.பி 1805 இல் ஆஸ்திரியாவையும் 1806 இல் பிரஷ்யாவையும் தோற்கடித்துத் தனது அதிகாரத்தைப் பரப்பினான். அவ்வாறே அதுவரை பெயரளவில் ஜேர்மன் பகுதியில் செயற்பட்ட புனித உரோமப் பேரரசை ஒழித்து அவன் கி.பி 1806 இல் பவேரியா, வர்டெம்பர்க், பெமன், டார்ம்ஸ்டாட், சாக்சனி போன்ற 12 பிரதேசங்களை ஒன்றிணைத்து றைன் கூட்டமைப்பினை ஆரம்பித்தான்.

அதன் பின்னர் றைன் கூட்டமைப்பினுள் இருந்த மானிய முறையை நீக்கி, நெப்போலிய சட்டக்கோவையை அறிமுகப்படுத்தினான். மேலும் பொது வரிக் கொள்கையை அறிமுகப்படுத்திய போது அது அந்நாட்டின் வர்த்தக முன்னேற்றத்தில்

தாக்கத்தை ஏற்படுத்தியது. அப் பிரதேசம் நெப்போலியனின் கீழ் வெளிநாட்டு ஆதிக்கத்திற்கு உட்பட்டதால் அதிலிருந்து விடுபடுவதற்கு ஜேர்மன் மக்கள் ஒன்றுபட வேண்டியதன் அவசியம் உணரப்பட்டது.

நெப்போலியனின் தோல்வியின் பின்னர் வியன்னா மகாநாட்டில் மீண்டும் உரியவர்களுக்கே நாடுகள் கொடுக்கப்பட்ட போதிலும் ஜேர்மன் பிரதேசம் மீண்டும் 39 பிரிவுகளாகப் பிரிந்தது. ஆஸ்திரியாவும் பிரஷ்யாவும் அவற்றில் பலம் வாய்ந்ததாகத் திகழ்ந்தன. வியன்னா அதிகாரிகளால் அந்த 39 அரசுகளும் ஒன்றிணைக்கப்பட்டு ஜேர்மன் **கூட்டமைப்பு** ஒன்றை அமைத்தமை ஜேர்மனிய ஐக்கியத்தின் முக்கிய கட்டமாகும்.

ஆஸ்திரியாவின் சான்சலர் பதவி வகித்த மெட்டநிக், தமது பிரதேசங்களில் மக்களிடையே எழுச்சி பெற்ற லிபரல்வாதக் கருத்துக்களைக் கட்டுப்படுத்தியமையும், ஜேர்மன் ஐக்கியத்தில் முக்கியம் பெறுகிறது. அவன் ''கால்ஸ்பாட்'' (Carlsbad Decrees) எனும் ஆணையை ஜேர்மன் கூட்டமைப்பைக்கொண்டு நிறைவேற்றிக் கொண்டான். பின்னர் அப்பிரதேசங்களில் லிபரல் வாதக் கருத்துக்கள் எழுவதைத் தவிர்த்தான். அது ஜேர்மன் ஐக்கியத்தில் முக்கியத்துவம் பெற்றது. மெட்டர்நிக்கின் இந்தத் தடைகள் காரணமாக ஆஸ்திரியாவுக்குப் பணிந்திட ஜேர்மனியப் பகுதிகள் விரும்பவில்லை.

இந்நிலையில் மற்றைய முக்கிய அரசான பிரஷ்யா எழுச்சி பெற்று வந்தது. பிரஷ்யாவில் மானிய அடிமை முறை ஒழிக்கப்பட்டு, மத்திய வகுப்பினரைக் கூடுதலாக நிர்வாகத்தில் பங்கு கொள்ளச் செய்து, விரிவான கல்விக் கொள்கையை செயற்படுத்தியதோடு பலம் வாய்ந்த போர்ப்படை ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. கி.பி 1843 இல் பிரஷ்யாவை மையமாகக் கொண்டு ஜேர்மன் பிரதேசத்தில் சொல்வரின் (Zollverein)எனும் தீர்வையற்ற வர்த்தக சங்கம் ஆரம்பமானது. இதனால் வர்த்தகம் வளர்ச்சியடைந்தது. இந்த தீர்வையற்ற வர்த்தக சங்கத்தில் இணைந்த அரசுகளிடம் தீர்வை அறவிடப்படாததால் பல ஜேர்மன் அரசுகள் இதில் சேர்ந்து கொண்டன.

கி.பி 1843 ஆம் ஆண்டாகும்போது தென் ஜேர்மன் அரசுகளிடையே இவ்வாறான சங்கம் ஏற்பட்டது. அதற்கு மேலதிகமாக ஹனோவர், சாக்சன், வடஜேர்மன் அரசுகளிடையேயும் இவ்வாறான சங்கங்கள் தோன்றின. பின்னர் அவை அனைத்தும் சொல்வரின் சங்கத்துடன் இணைந்தன. அரசியல் இணைவு பொருளாதார வளர்ச்சிக்குக் காரணமாகிறது எனக் கருதப்பட்டமையே இதற்கான காரணமாகும்.

கி.பி 1848 ஆம் ஆண்டில் பிரான்சில் ஏற்பட்ட புரட்சி காரணமாக, ஜேர்மன் பிரதேசங்களிலும் புரட்சியின் நோக்கமாக இருந்தது, ஜேர்மன் கூட்டமைப்பை முடிவுக்கு கொண்டு வந்து ஒன்றிணைந்த ஆட்சியின் பொருட்டு அரசியல் அமைப்பை உருவாக்கிக் கொள்வதன் மூலம் லிபரல் வாத ஆட்சியை ஏற்படுத்துவதாகும். ஆஸ்திரியாவில் மெட்டர்நிக் பதவி விலகி சீர்திருத்தங்களுக்கு இணங்கினான். பிரஷ்யாவிலும் புரட்சி வெற்றியளித்தது.

இதனால் லிபரல்வாத ஐக்கிய ஜேர்மனியின் பொருட்டு தேசிய சபையொன்று அனைத்து ஜேர்மன் அரசுகளினதும் பிரதிநிதிகள் 500 பேரின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றதுடன் அது பிராங்பாட் பாராளுமன்றம் எனப்பட்டது. பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், சட்டத்தரணிகள், நீதிபதிகள், குருமார் ஆகியோர் அதில் பிரதிநிதித்துவம் வகித்தனர். ஆஸ்திரியா உட்பட ஜேர்மன் அரசுகள் மகாஜேர்மனி (Great Germany)என அறிமுகமானது. பிரஷ்யா உள்ளடங்கிய பகுதி சிறிய ஜேர்மனி (Little Germany)எனப்பட்டதுடன், சிறிய ஜேர்மனி என்ற எண்ணக்கரு பிராங்பார்ட் பாராளுமன்றத்தில் கலந்துரையாடலில் இடம் பெற்று தடைப்பட்டுப்போனது.



*உரு 11.5 பிஸ்மார்க்*

இதற்கிடையில் பிரஷ்யாவின் மன்னன் பிரடரிக் வில்லியம் தனது படையை நடாத்திச் சென்று சிறிய ஜேர்மன் அரசைத் தன் ஆட்சியின் கீழ் ஸ்தாபிக்க நடவடிக்கை எடுத்தான். அதுவும் தோல்வியில் முடிவடைந்தது. இதன் பின்னர் ஒட்டோவான் பிஸ்மார்க் பிரஷ்யாவின் கீழ் ஐக்கிய ஜேர்மனியை நிறுவுதற்கு நடவடிக்கை எடுத்தான். பிரஷ்யாவின் சான்சலர் பதவியில் அமர்ந்த அவன் லிபரல் வாதத்தை அடக்கிப் படையைப் பலப்படுத்தினான். கி.பி 1862இல் போலாந்தில் கிளர்ச்சி ஏற்பட்டபோது பிஸ்மார்க் ரஷ்யா தொடர்பாகப் பின்பற்றிய கொள்கை காரணமாக




*தேசப்படம் 11.2 ஜேர்மன் ஒன்றிணைக்கப்படல்*

ரஷ்யா, பிரஷ்யாவுடன் கூட்டுச் சேர்ந்தது. டென்மார்க் பகுதியையும் தன்னடிப்படுத்திய பிஸ்மார்க் எதிர்காலத்தில் ஆஸ்திரியாவுடன் யுத்தம் ஏற்பட்டால் அவர்களுக்கு ஏனைய நாடுகளின் உதவி கிடைக்கா வண்ணம் பிரான்ஸ் இத்தாலி ஆகிய நாடுகளுடன் உடன்படிக்கை செய்து கொண்டான்.

கி.பி 1866 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14 ஆம் திகதி தொடக்கம் ஜூலை மாதம் 3ஆந் திகதி வரை பிரஷ்யாவுக்கும் ஆஸ்திரியாவுக்கும் இடையே நடைபெற்ற யுத்தத்தில் ஆஸ்திரியா தோல்வியடைந்தது. அதன் பின்னர் ஜேர்மன் கூட்டமைப்பைக் கலைத்துப் புதிய கூட்டமைப்பு அரசை அறிமுகம் செய்து அரசியல் முறையையும் முன் வைத்தது. இந்தப் புதிய கூட்டமைப்பின் முக்கிய அமைச்சராக விளங்கியவர் பிஸ்மார்க் ஆவார். பின்னர் அது வட ஜேர்மன் சமஷ்டி கூட்டமைப்பு எனப்பட்டது. அதன் சான்சலராகவும் விளங்கியவர் பிஸ்மார்க் ஆவார்.

ஜேர்மனியை ஐக்கியப்படுத்தும் இறுதிக்கட்டமாக விளங்கியது பவேரியா, வூடெம்பர்க், பேடின் ஆகிய தென் ஜேர்மன் நாடுகளை கூட்டமைப்பில் இணைத்துக் கொண்டமையாகும். இதற்கிடையில் பிரான்சுடன் ஏற்பட்ட யுத்தத்தில் பிஸ்மார்க் வெற்றி பெற்றதால் கி.பி.1871 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18 ஆந் திகதி வேர்சேல்ஸ் மாளிகையில் வட ஜேர்மன் கூட்டமைப்பையும் தென் ஜேர்மன் அரசுக்களையும் ஒன்றிணைத்து ஜேர்மன் பேரரசு உருவாக்கப்பட்டது. அத்துடன் ஜேர்மனியினை இணைப்பது தொடர்பான செயற்பாடு முடிவுற்றது.

**செயற்பாடு :**

★ *ஜேர்மனை இணைப்பதில் இனவாத, லிபரல்வாத கருத்துக்கள் செயற்பட்ட விதம் பற்றிக் கலந்துரையாடுக.*

## பொதுவுடமை வாதமும் ரஷ்யப் புரட்சியும்

### பொதுவுடைமை வாதம்:

செல்வம் தொடர்பாகப் பொது உரிமையை உறுதி செய்து, அனைத்து பிரசைகளும் தமது திறமையை வளர்த்துக் கொள்ளும் பொருட்டு சம அளவிலான சந்தர்ப்பத்தை உறுதி செய்து உற்பத்தியின் பலனை அனைவரிடையேயும் சமமாகப் பங்கீடு செய்யும் பொருளாதார அரசியல் முறையே பொது உடமையாகும்.

### ஏகாதிபத்திய ஆட்சியின் பின்னணி

ரஷ்யாவை மகா பீட்டர் மன்னனும், மகா கத்தரீன் அரசியும் பரந்த, சிறந்த அரசாக உருவாக்கினர். ஆனால் கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் ரஷ்யாவின் சனத்தொகை வளர்ச்சியடைந்ததுடன் பல்வேறு சமய பண்பாட்டு வேறுபாடுகளுடைய மக்கள் கூட்டம் ஒன்று ரஷ்யாவுக்கு உரிமையானது இந்த இரு ஆட்சியாளர்களுக்கும் ஆட்சி


இலவச விநியோகத்திற்காக

செய்வதற்கு முறையான வேலைத்திட்டம் ஒன்று இருந்த போதிலும், அவர்களது பிற்கால ஆட்சியாளர்களுக்கு அவ்வாறான ஒன்று இருக்கவில்லை.

குறிப்பாக சார் மன்னர்கள் தமது அதிகாரத்தை அதிகரித்துக் கொள்வதற்கு சர்வாதிகார முறையைக் கடைப்பிடித்தனர். மக்கள் பிரபுக்களுக்கு அடிமையானதுடன், பிரபுக்களைப் போன்று ரஷ்ய ஒத்தடொக்ஸ் திருச்சபையும் போர்ப் படையினருக்கும், சார் மன்னர்களுக்கும் பணிந்து நடக்கும் நிறுவனமாக விளங்கியது. 97 % மான கிராம மக்கள் வறுமையில் வாடினர். விவசாயிகள் பல்வேறு அநீதிகளுக்கும், இன்னல்களுக்கும் முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. வர்த்தகம், கைத்தொழில், வங்கி ஆகிய துறைகளில் ஈடுபட்டோர் பணம் சேகரித்துக் கொண்டு படைகளிலும் நிர்வாகத்திலும் நீதித்துறையிலும் பதவி வகித்தனர்.

மொஸ்கோவை மையமாகக் கொண்டு உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகமும், கைத்தொழிலும் உருவாகின. 19 ஆம் நூற்றாண்டில் ரஷ்யாவில் அவ்வாறான கைத்தொழிற்சாலைகள் 3000 இருந்தன. தொழிலாளர் தொகை 8 இலட்சமாக இருந்தது. தொழிலாளர்களின் உழைப்பு சூறையாடப்படல், ஏழ்மை, சமூக வாழ்வு போன்ற பிரச்சினைகளையும் தொழிலாளர் எதிர்நோக்கினர்.

மகா பீட்டர் மன்னனின் ஆட்சிக்காலம் முதற்கொண்டு ரஷ்யாவில் சமூக பொருளாதார சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் முதலாவது இரண்டாவது அலெக்சாண்டர் மன்னர்கள் சுகபோக வாழ்வில் ஈடுபட்டதுடன், அதிகாரிகளிடம் காணப்பட்ட சமகால அறிவு போதாமை காரணமாக அவைகளை செயற்படுத்த முடியாது போயின. எனினும் கி.பி. 1881 மார்ச் மாதம் இரண்டாம் அலெக்சாண்டர் மன்னன் மானிய அடிமை ஒழிப்புச் சட்டத்தை நிறைவேற்றியதன் மூலம் ஒரு கோடி நிலமானிய அடிமைகள் ஐரோப்பாவைப் போன்று மோதல் இன்றி சுதந்திரம் பெற்றனர். கைத்தொழிலின் பொருட்டு ஊழியத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் இது வழியாக அமைந்தது. நிலமானிய அடிமைத்தனத்தில் இருந்து விடுதலை பெற்றோர், விவசாயத்திற்குத் தேவையான நிலம் இன்மையால் கிராமங்களில் விவசாய நிலங்களிலும் நகரங்களிலும் தொழிற்சாலைகளிலும் கூலி வேலை செய்தனர். அரசினால் கொடுக்கப்பட்ட நிலங்களுக்கு வரி அறவிடப்பட்டது.

இரண்டாம் அலெக்சாண்டர் மன்னன் கல்வி, சுகாதாரம், புகையிரதப் பாதை போன்ற பொது வசதிகளை உயர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்ட பொழுதிலும், அதன்மூலம் அதிக பலன் கிடைக்கவில்லை. இதனால் அவனும் சர்வாதிகார ஆட்சியாளனாகவே விளங்கினான். இதனால் கி.பி 1878 இல் 'கறுப்புப் பிரிவினர்' என்ற குழுவினரின் தாக்குதலால் அரசன் உயிரிழந்தான்.


அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த மூன்றாம் அலெக்சாண்டர், பயங்கர சர்வாதிகாரியாவான். சீர்திருத்தவாதிகளை அகற்றி கடும்போக்காளர்களைப் பதவிகளில் அமர்த்தினான். அரசை விமர்சித்தல் கூட்டங்கள் கூடுதல், கருத்து வெளியிடல் என்பன

தடைசெய்யப்பட்டன. கல்வி தொடர்பான செலவுகள் குறைக்கப்பட்டன. நீதிமன்ற அதிகாரங்கள், பிரதேச நிர்வாக அதிகாரங்கள் என்பன அரசனின் கீழ் கொண்டு வரப்பட்டுப் பிரபுக்களுக்குக் கொடுக்கப்பட்டது.

பின்னர் ஆட்சிக்கு வந்த முதலாம் நிக்லஸ் துன்பத்தை மேலும் தீவிரமாக்கினான். தொழிலாளர் மிகவும் துன்பத்துக்குள்ளாயினர். ரஷ்யாவுக்கு முதலில் பொது உடைமையை அறிமுகப்படுத்தியவர் பெலகானோவ் ஆவார். ‘உழைப்பாளர் புரட்சிக் குழு’ முதல் மார்க்ஸீய அமைப்பாகும். தொழிலாளரும் பல்கலைக்கழக மாணவரும் இதனை மிகவும் விரும்பினர். விஸிட்மீர் லெனின் இந்தக் குழுவின் அங்கத்தவராக இருந்தார். பருத்தித் தொழிற்சாலைத் தொழிலாளரின் வேலை நிறுத்தத்திற்கு அவர் தலைமை வகித்தார். தொழிலாளர் கட்சியாக ஒழுங்கமைக்கப்பட வேண்டுமென லெனின் சுட்டிக் காட்டினார். டிரொஸ்கி, மார்டொவ் என்போர் லெனினின் கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அக்குழுவினர் ‘மென்ஸவிக் எனப்பட்டதோடு லெனினின் கருத்தை ஏற்றுக் கொண்ட பெரும்பான்மையினர் போல்ஷவிக் எனப்பட்டனர்.

## 1905 ஆம் ஆண்டுப்புரட்சி

கி.பி 1900 ஆம் ஆண்டளவில் ஐரோப்பாவில் ஏற்பட்ட கைத்தொழில் நெருக்கடி ரஷ்யாவிலும் பரவியதால் 3000 தொழிற்சாலைகள் மூடப்பட்டன. விவசாயிகள், தொழிலாளர்கள், இளைஞர்கள் ஆகியோர் பேரரசுக்குக் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தனர். வேலை நிறுத்தும் உச்ச நிலையை அடைந்தது. கருங்கடலில் கடற்படையினரும் கிளர்ச்சியில் இணைந்து கொண்டனர். துருக்கியும், பிரான்சும் ரஷ்யாவுடன் நல்ல மன நிலையில் இருக்கவில்லை. கி.பி. 1905 ஆம் ஆண்டு ஜப்பான் -ரஷ்ய யுத்தத்தில் ரஷ்யா தோல்வியடைந்தமையும் பொது மக்களின் ஆர்ப்பாட்டம் அதிகரிக்கக் காரணமாகியது. மன்னரிடம் சென்ற ஊர்வலமொன்று துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதுடன் டிரொஸ்கி உட்படத் தலைவர்கள் சிறைப்பிடிக்கப்பட்டுக் கிளர்ச்சி அடக்கப்பட்டது.




*தேசப்படம் 11.3*
*ரஷ்யாவின் ஆதிக்கப் பரம்பல்*

## டூமா தோல்வியுறல்

ஆர்ப்பாட்டத்தில் கேட்டுக்கொண்ட சீர்திருத்தத்திற்கு அமைய முதல் டூமா கி.பி. 1906 ஆம் ஆண்டு பீட்டர்ஸ்பர்க் நகரில் அமைக்கப்பட்டது. வாக்குறுதி முழுமையாக நிறைவேற்றப்படாமையால் போல்ஷவிக் பிரிவினர் பதவி விலகினர்.


இலவச விநியோகத்திற்காக

மீண்டும் கி.பி 1907 ஆம் ஆண்டு இரண்டாம் டுமா அமைக்கப்பட்டதுடன் அவர்களும் தொடர்ந்து பேரரசிற்கு எதிராக இருந்தனர். கி.பி 1912 -1917 வரையிலிருந்த மூன்றாம் டுமாவில் இருந்த பிரதிநிதிகளில் 410 பேரில் 310 பேர் பேரரசுக்கு சார்பான நிலச் சொந்தக்காரராவர். கி.பி 1912 -1917 வரை இருந்த நான்காம் டுமாவும் அவ்வாறே இருந்தது.

## சார் மன்னரின் ஆட்சி வீழ்ச்சியுறல்

கி.பி 1910 ஆம் ஆண்டாகும் போது தொழிலாளர் வேலை நிறுத்தம் மொஸ்கோவில் ஆரம்பமானதுடன் கி.பி 1913 ஆம் ஆண்டாகும் போது 12 இலட்சம் பேர் அதில் இணைந்தனர். முதலாம் உலக யுத்தத்தில் ரஷ்யா சம்மந்தப்பட்டதால் பிரச்சினை மேலும் அதிகரித்தது. உணவு, மருந்து, விவசாயப் பொருட்கள் என்பனவற்றிற்குத் தட்டுப்பாடு நிலவியது. பொருட்களின் விலை அதிகரித்தது. விவசாயிகள் பலவந்தமாக யுத்தத்திற்கு அனுப்பப்பட்டனர். பெண்கள் தொழிற்சாலைகளில் இன்னல்களுக்கு உள்ளாகினர். பாணின் விலை அதிகரித்தது. படையினருக்கு உணவு கிடைக்கவில்லை. இதனால் படையினர் கிளர்ச்சி செய்தனர்.

## 1917 ஆம் ஆண்டு மார்ச் மாதப் புரட்சி:

மக்கள் பாண் கேட்டு வீதியில் இறங்கினர். கலகத்தை அடக்க அனுப்பப்பட்ட படைவீரர் கலகக்காரருடன் இணைந்து கொண்டனர். இதனால் பீட்டர்ஸ் பேர்கில் சார் மன்னரின் ஆட்சிக்கு எதிராக ஆயுதந் தாங்கிய கலவரம் நிகழ்ந்தது. போல்செவிக் குழுவினர் குழப்பத்திற்குத் தலைமை தாங்கி 'சோவியட் சபை'யை நிறுவினர். அவற்றை அவர்களது தற்காலிக அரசாங்கத்தின் கீழ் கொண்டு வந்து அரசனை முடிதுறக்கும்படி வற்புறுத்தினர். 1917 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆந் திகதி சார் மன்னரின் ஆட்சி முடிவுற்றது.

## 1917 ஆம் ஆண்டு அக்டோபர் புரட்சி

தற்காலிக அரசு தொடர்ந்தும் யுத்தத்தில் ஈடுபட்டிருந்ததுடன் பிரச்சினை மேலும் வலுவடைந்தது. லெனினும் ட்ரொஸ்கியும் இணைந்து நிலம், அமைதி, இனம், நிர்வாகம் தொடர்பாக அறிக்கையை வெளியிட்டுத் தொழிலாளரின் கிளர்ச்சிக்குத் தலைமை வகித்தனர். கி.பி. 1917 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் புகையிரதம், சுரங்கம், உலோகம், புடைவை ஆகிய தொழிற்சாலைகளில் வேலை செய்த 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இந்தக் கிளர்ச்சிகளுக்குத் தலைமைத்துவம் அளித்து, சோவியட் சபைகளில் தலைமைத்துவம் வகித்து, போல்ஷவிக் பிரிவினர் அன்றைய தினமே மாளிகையைச் சூழ்ந்து பீரங்கித் தாக்குதல் நடத்தினர். அன்றைய இரவில் சோவியட் தேசிய காங்கிரஸ் கூடி, லெனினின் பொதுமக்களின் ஆணையாளர் சபைக்கு அதிகாரத்தைக் கொடுத்து புரட்சியை வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டு வந்தது.

இவ்வாறு நடைபெற்ற ரஷ்யப் புரட்சியால் பொதுவுடமைவாதம் செயல் ரீதியாக இடம் பெறலாயிற்று. அதிகமானோருக்கு நன்மை தரக்கூடிய உற்பத்தி முறையில் அமைந்த அரசியல், பொருளாதார அமைப்பு உருவானது.

### சாராம்சம்

★ *பிரான்சியப் புரட்சியின் மூலம் மானிடவாதக் கருத்துக்கள் சிறப்புற வழி ஏற்பட்டது.*
★ *தேசிய வாதக் கருத்துக்களால் இத்தாலி ஐக்கியம் அடைந்தது*
★ *லிபரல் வாதம், தேசியவாதம் என்பனவற்றால் ஜேர்மனி ஐக்கியம் அடைந்தது.*
★ *ரஷ்யப் புரட்சியில் பொதுவுடமை வாதத்தைக் காணக் கூடியதாக இருந்தது.*

### செயற்பாடு :

★ *ரஷ்யப் புரட்சிக்கான காரணங்களைக் கலந்துரையாடுக*

### பயிற்சி :

*01. சுருக்கமான விடை எழுதுக*

(i) *பிரான்சியப் புரட்சியை முன்னெடுத்துச் சென்றோர் யாவர்?*

(ii) *பிரான்சியப் புரட்சிக்கு வழிவகுத்த காரணங்கள் 3 எழுதுக?*

(iii) *இத்தாலிய ஐக்கியத்திற்கு முன்னின்று செயற்பட்ட மூவரைக் குறிப்பிடுக?*

(iv) *இத்தாலிய ஐக்கியத்தின் மூலம் ஒன்றிணைந்த 4 பிரதேசங்களைக் குறிப்பிடுக?*

(v) *பழைய ஜேர்மன் பிரதேசங்களில் ஆரம்பத்தில் எத்தனை முடியாட்சிகள் இருந்தன?*

(vi) ஜேர்மன் பிரதேசத்தில் இருந்த இரு பிரதான அரசுகளைத் தருக?

(vii) ரஷ்யப் புரட்சிக்கு வழிவகுத்த காரணங்கள் 5 எழுதுக?

(viii) போல்ஷவிக், மென்ஸவிக் என்போர் யாவர்?

**மிகவும் பொருத்தமான விடைகளைத் தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| *1) 16 ஆம் லூயி மன்னனின் மனைவி* | *1) காபொனாரி இயக்கம்* |
| *2 ) பிரான்சிய நடுத்தரவர்க்க மக்கள்* | *2) பீட்மன்ட் அரசின் பிரதமர்* |
| *3) கரிபால்டி* | *3) ஆஸ்திரியாவின் சான்சலர்* |
| *4) ஜோசப் மசினி* | *4) பொல்ஷவிக் கட்சி* |
| *5) கவுன்ட் கவூர்* | *5) டெனிஸ் மைதானத்தில் உறுதியுரை* |
| *6) மெட்டர்நிக்* | *6) பிரஷ்யாவின் சான்சலர் பதவி* |
| *7) லெனின்* | *7) முதன்முதல் ரஷ்யாவில் பொதுவுடமையை அறிமுகம் செய்தனர்.* |
| *8) பிஸ்மார்க* | *8) மேரி அன்டடோயினட் அரசி* |
| *9) நெப்போலியன் பொனபாட்* | *9) பிரான்சின் ஆதிக்கம் ஐரோப்பாவில் பரவுதல்* |
| *10 பெலகானொவ்* | *10) செஞ்சட்டை வீரர்* |